செ.வெ.எண்:25 நாள்:12.06.2019

## கரூர் மாவட்டம்

**பொறியியல் மாணவர் சேர்க்கைக்கு சான்றிதழ் சரிபார்ப்பிற்கான கடைசி நாள் நாளை வரை நீட்டிக்கப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தகவல்**

தமிழ்நாடு அரசு தொழில்நுட்ப கல்வி இயக்ககம் மூலம் நடைபெற்று வரும் பொறியியல் மாணவர் சேர்க்கைக்கான இணையவழி கலந்தாய்வு சேவை மையம் கரூர் மாவட்டத்தில் தாந்தோன்றிமலையில் உள்ள அரசு கலைக்கல்லூரியில் முதல் மே 2ம் தேதி முதல் செயல்பட்டு வருகின்றது. இந்த சேவை மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் இன்று(12.06.2019) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, மாணவ-மாணவிகளுக்கு பொறியியல் கல்லூரிகளின் பட்டியல் அடங்கிய வழிகாட்டி புத்தகங்களை வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு அரசு தொழில்நுட்ப கல்வி இயக்ககம் மூலம் நடைபெற்று வரும் பொறியியல் மாணவர் சேர்க்கைக்கான இணையவழி கலந்தாய்வு சேவை மையம் கரூர் அரசு கலைக்கல்லூரியில் மே 2ம் தேதி முதல் மே 31ம் தேதி முடிய முதற்கட்டமாக மாணவர்கள் தங்கள் விண்ணப்பத்தினை இணையவழி மூலமாக பதிவு செய்ய வசதிகள் செய்யப்பட்டு நடைபெற்றது. இரண்டாம் கட்டமாக ஜூன் 6ம் தேதி முதல் ஜூன் 11 ஆம் தேதிவரை சான்றிதழ் சரிபார்ப்பு நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. மாணவர்களின் நலன் கருதி இந்த கால அவகாசம் இரண்டு நாட்கள் நீட்டிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஜூன் 13ஆம் தேதி வரை இந்த சான்றிதழ் சரிபார்ப்பு பணி நடைபெறவுள்ளது. இதனை மாணவ-மாணவிகள் முறையாகப்பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஜூலை 3ம் தேதி முதல் ஜூலை 28ம் தேதி முடிய நடைபெறவிருக்கும் இணையவழி விருப்பத்தேர்வு மற்றும் தேர்வினை உறுதி செய்தல் போன்றவற்றினை மாணவர்கள் தங்கள் வீட்டிலிருந்தோ அல்லது சேவை மையத்திலோ செய்து கொள்ளலாம். விண்ணப்பம் பதிவு செய்ய https://www.tneaonline.in அல்லது https://www.tndte.gov.in என்ற இணையதளங்களை பயன்படுத்த வேண்டும். மேலும் விவரங்களுக்கு கரூர் அரசு கலைக்கல்லூரியில் நிறுவப்பட்டுள்ள கலந்தாய்வு சேவை மையத்தினை அணுகலாம் என்றும், மாணவர்களின் வசதிக்காக கல்லூரி வழியாக செல்லும் அனைத்துப் பேருந்துகளும் நின்று செல்லும் வகையிலும், தடையில்லா மின்சாரம் மற்றும் இணையதள வசதி வழங்கவும், ஆன்லைன் மூலம் சான்றிதழ்களின் மெய்த்தன்மை காண்பதற்கான வசதியும் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பதற்காக 25 இடங்களில் மேஜை வசதிகளும் செய்து கொடுப்பதற்காக தனித்தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவித்தார்

இந்நிகழ்வின்போது அரசு கலைக்கல்லூரியின் கணினித்துறைத் தலைவர் திரு.தங்கதுரை, பேராசிரியர் திரு.ராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.